DFCC BANK
Keep Growing

# இலத்திரனியல் விபரக்கூற்று
# முக்கிய தகவல்கள் ஆவணம்

2019

## DFCC இலத்திரனியல் விபரக்கூற்றுகள் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை

நீங்கள் ஏற்கனவே இலத்திரனியல் விபரக்கூற்றுக்காகப் பதிவு செய்திருந்தால் அல்லது அவ்வாறு செய்ய உத்தேசித்திருந்தால், அதன் மூலம் அதிகபட்ச அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள உதவும் வகையில் அச் சேவையின் சிறப்பம்சங்களை உங்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

**உள்ளடக்கம்**


| இல. | தலைப்பு | பக்க இல. |
|---|---|---|
| 1. | இலத்திரனியல் விபரக்கூற்று என்றால் என்ன? | 3 |
| 1.1 | இலத்திரனியல் விபரக்கூற்றுகளைப் பயன்படுத்துவதன் நன்மைகள் | 3 |
| 1.2 | இலத்திரனியல் விபரக்கூற்றுகளுக்காகப் பதிவு செய்தல் | 3 - 4 |
| 1.3 | கணக்கொன்றை இலத்திரனியல் விபரக்கூற்றில் சேர்த்தல் | 4 |
| 1.4 | இலத்திரனியல் விபரக்கூற்றுகளின் உருவாக்கம் | 5 |
| 1.5 | இலத்திரனியல் விபரக்கூற்றின் வடிவம் | 5 - 8 |
| 1.6 | இலத்திரனியல் விபரக்கூற்று வசதியிலிருந்து விலகுதல் | 8 |
| 2. | எம்முடன் தொடர்புகொள்ளும் முறை | 9 |

**1. இலத்திரனியல் விபரக்கூற்று என்றால் என்ன?**

இலத்திரனியல் விபரக்கூற்று என்பது உங்கள் மாதாந்த வங்கி அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளவும் சேமித்து வைத்திருக்கவும் வசதியான ஒரு வழியாகும். உங்கள் மாதாந்த மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட வங்கி அறிக்கைகளை உங்களால் வங்கிக்கு வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்குப் பெற்றுக்கொள்ள இந்த வசதி இடமளிக்கின்றது. இச் சேவைக்கென எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.

**1.1 இலத்திரனியல் விபரக்கூற்றுகளைப் பயன்படுத்துவதன் நன்மைகள்**

- **வசதியானது**
- **விரைவானது**
- **பாதுகாப்பானது**

**புதிய வாடிக்கையாளர்களுக்கு**

உங்கள் அன்றாட வங்கிச் சேவைத் தேவைகளை வசதியான முறையில் நிறைவேற்றி உங்களுக்குச் சிறந்த சேவை வழங்கும் முகமாக, புதிதாக ஆரம்பிக்கப்படும் கணக்குகளுக்கு சகல பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளையும் (இலத்திரனியல் விபரக்கூற்று, வேர்ச்சுவல் வொலட், SMS அறிவிப்பு, ஒன்லைன் வங்கிச் சேவை) நாம் கட்டாயமாக்கியுள்ளோம். பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளில் எதையேனும் நீங்கள் பெற விரும்பாவிட்டால், எம்முடன் அது பற்றிப் பேசலாம்.

**தற்போதய வாடிக்கையாளர்களுக்கு**

எமது வங்கியுடன் ஏற்கனவே இணைந்திருக்கும் ஒரு வாடிக்கையாளரான நீங்கள் இதுவரை இலத்திரனியல் விபரக்கூற்று வசதிக்காகப் பதிவு செய்யாதிருந்தால், உங்களுக்கு வசதியான DFCC வங்கிக் கிளையொன்றிற்கு விஜயம் செய்து எமது அலுவலர் ஒருவருடன் பேசி இச் சேவைக்காகப் பதிவு செய்துகொள்ளும்படி அழைப்பு விடுக்கின்றோம். உங்கள் மின்னஞ்சல் முகவரியையும் உங்கள் தற்போதய பதிவேடுகளில் உள்ள விபரங்களை உறுதிப்படுத்துவதற்காக வேறு சில விபரங்களையும் படிவம் ஒன்றில் நிரப்பும்படி நீங்கள் கேட்கப்படுவீர்கள்.

**1.2 இலத்திரனியல் விபரக்கூற்றுகளுக்காகப் பதிவு செய்தல்**

DFCC வங்கியில் கணக்கை வைத்திருக்கும் எவரும் இலத்திரனியல் விபரக்கூற்று வசதியைப் பெற முடியும். இந்த வசதிக்காகப் பதிவுசெய்ய விரும்புபவர்கள் *மாற்று ஊடகங்களுக்கான விண்ணப்பத்தில்* கூறு (1) **“பொது விபரங்கள்”** என்ற பகுதியை நிரப்ப வேண்டும். கூறு (4) “இணைக்கப்பட வேண்டிய கணக்குகள் - இலத்திரனியல் விபரக்கூற்று என்ற பகுதியிலுள்ள சகல கட்டாய கட்டங்களும் நிரப்பப்பட வேண்டும். குறிப்பாக, இலத்திரனியல் விபரக்கூற்றுக்காக வழங்கப்படும் மின்னஞ்சல் முகவரி சரியாகவும் தெளிவாகவும் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.



APPLICATION FOR VALUE ADDED SERVICES - PERSONAL
மேலதிக சேவைகளுக்கான விண்ணப்பம் - தனிநபர்

Client ID :

Date : D D M M Y Y Y Y
திகதி

(01) GENERAL DETAILS தனிப்பட்ட விபரங்கள்

NIC / PP / DL No. :
தே.அ.அ/க.சீ./ இல.

Mobile No.* :
கைத்தொலைபேசி இல.*

Email Address* :
மின்னஞ்சல் முகவரி*

* The email address and mobile number provided in this section will be used to set up eBanking, eStatements, Virtual Wallet (VW)and SMS Alerts. இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைத்தொலைபேசி இலக்கமானது இணையத்தள வங்கிச் சேவை, இலத்திரனியல் விபரக்கூற்றுகள், மின்னஞ்சல் அறிவிப்புச் சேவை, மெய்நிகர் வொலட், குறுந்தகவல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும்.

(02) DEBIT CARD பற்று அட்டை

Primary Savings Account No. :
பிரதான சேமிப்புக் கணக்கு இல.

Enable POS Transactions
POS கொடுக்கல் வாங்கல்களை செயற்படுத்த

Primary Current Account No. :
பிரதான நடைமுறைக் கணக்கு இல.

Enable POS Transactions
POS கொடுக்கல் வாங்கல்களை செயற்படுத்த

(Only one of the primary accounts can be linked for POS transactions. பிரதான கணக்குகளில் ஒன்றை மட்டுமே POS கொடுக்கல் வாங்கல்களுக்காக இணைக்க முடியும்)

(03) eBANKING இணையத்தள வங்கிச் சேவை

Preferred User ID :
இலத்திரனியல் வங்கிச் சேவைக்கென விரும்பப்படும் பயனர் பெயர்

*User ID must contain 6 to 10 characters.
பயனர் பெயர் 6 முதல் 10 எழுத்துகளை கொண்டிருக்க வேண்டும்.

*User ID will be accepted subject to availability and will otherwise be customised by the bank.
நீங்கள் விரும்பும் பயனர் பெயர் கிடைக்காவிட்டால், வங்கியே ஒரு பயனர் பெயரை வழங்கும்.

*User ID cannot contain spaces, special characters and capital letters.
பயனர் பெயரில் இடைவெளிகள், விசேட அடையாளங்கள் (*?/@) மற்றும் கெப்பிட்டல் எழுத்துகள் இருத்தலாகாது.

(04) ACCOUNTS TO BE LINKED இணைக்கப்படவிருக்கும் கணக்குகள்

| Account No. கணக்கு இல. | Debit Card பற்று அட்டை | eBanking இணையத்தள வங்கிச் சேவை | VW மெய்நிகர் வொலட் | eStatement இலத்திரனியல் விபரக்கூற்று | SMS Alerts SMS அறிவிப்புகள் | All அனைத்து சேவைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

Link all Deposit Accounts
சகல வைப்புக் கணக்குகளையும் இணைக்கவும்

Link all Loan Accounts
சகல கடன் கணக்குகளையும் இணைக்கவும்

Please convert the passbook / physical statement into an eStatement.
கணக்குப் புத்தகத்தை/எழுத்து விபரக்கூற்றை இலத்திரனியல் விபரக்கூற்றாக மாற்றவும்.

Joint Account will be enabled depending on the operating instructions given in the mandate
ஆணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாட்டு அறிவுறுத்தல்களைப் பொறுத்து கூட்டுக் கணக்குகள் இயலுமாக்கப்படும்

Bank may decide on the minimum transaction threshold for receiving SMS alerts
SMS விழிப்பூட்டல்களைப் பெறுவதற்கான குறைந்தபட்ச கொடுக்கல் வாங்கல் எல்லையை வங்கி தீர்மானிக்கும்

பதிவு மேற்கொள்ளப்பட்ட பின்னர், வங்கியுடன் நீங்கள் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரிக்கு வரவேற்புச் செய்தியொன்று அனுப்பப்படும்.

கணக்குப் புத்தகச் சேமிப்புக் கணக்கை வைத்திருக்கும் ஒருவர் இலத்திரனியல் விபரக்கூற்றுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பினால் தனது கணக்கு அறிக்கை முறையைக் கணக்குப் புத்தகத்திலிருந்து கணக்கு விபரக்கூற்று முறைக்கு மாற்ற வேண்டும்.

*மாற்று ஊடகங்களுக்கான விண்ணப்பப் படிவத்தை* நிரப்பி, அருகிலுள்ள DFCC கிளையில் கையளிப்பதன் மூலம் இதனைச் செய்யலாம்.

**1.3 கணக்கொன்றை இலத்திரனியல் விபரக்கூற்றில் சேர்த்தல்**

விபரக்கூற்று வசதிக்காக மேலும் கணக்குகளைச் சேர்த்துக்கொள்ள ஒரு வாடிக்கையாளர் விரும்பினால், அவர் DFCC வங்கிக் கிளையொன்றிற்குச் சென்று *மாற்று ஊடகங்களுக்கான புதிய விண்ணப்பப் படிவமொன்றை* நிரப்பிக் கையளிக்க வேண்டும்.

**1.4 இலத்திரனியல் விபரக்கூற்றுகளின் உருவாக்கம்**

இலத்திரனியல் விபரக்கூற்று உருவாக்கப்படும் சந்தர்ப்பங்கள் பின்ருமாறு:

- ஒவ்வொரு மாதமும் 1ஆம் திகதி விபரக்கூற்று உருவாக்கப்பட்டு வாடிக்கையாளருக்கு அனுப்பப்படும்.
- வாடிக்கையாளர் *குறைந்தபட்சம் ஒரு விபரக்கூற்றுக் கணக்கை* வைத்திருந்தால் மட்டுமே விபரக்கூற்று உருவாக்கப்படும்.
- வாடிக்கையாளர் ஒரு குறிப்பிட்ட கணக்கின் பிரதான கணக்கு வைப்பாளராக இருந்தால் மட்டுமே இலத்திரனியல் விபரக்கூற்றில் அக் கணக்கு விபரங்கள் காட்டப்படும். *துணைக் கணக்கு வைப்பாளருக்காக இலத்திரனியல் விபரக்கூற்று உருவாக்கப்பட மாட்டாது.*
- விபரக்கூற்றுக் கணக்கானது ஒரு குறிப்பிட்ட விபரக்கூற்றுக் காலப்பகுதியில் குறைந்தபட்சம் *ஒரு கொடுக்கல் வாங்கலையாவது* கொண்டிருந்தால் மட்டுமே விரிவான விபரக்கூற்றொன்று உருவாக்கப்படும்.
- கணக்குப் புத்தகக் கணக்குகள், நிலையான வைப்புகள் மற்றும் லீசிங் வசதிகள் அனைத்திலுமுள்ள மீதிகள் இலத்திரனியல் விபரக்கூற்றின் *சுருக்கப் பக்கத்தில்* (1ஆம் பக்கம்) காட்டப்படும். சகல விபரக்கூற்றுக் கணக்குகள் மற்றும் வாடிக்கையாளர்களின் கடன்கள் தொடர்பாக விரிவான விபரக்கூற்று வழங்கப்படும்.
- பாதுகாப்புக் காரணங்களுக்காக, கணக்கு இலக்கங்கள் இலத்திரனியல் விபரக்கூற்றுகளில் பகுதியளவு மறைக்கப்பட்டிருக்கும்.

**1.5 இலத்திரனியல் விபரக்கூற்றின் வடிவம்**

**■ உங்கள் உறவின் சுருக்கம்**

நீங்கள் பேணும் வங்கிக் கணக்கின் வகைக்கேற்ப, கணக்கு மீதியின் சுருக்கத்தை உங்கள் உறவின் சுருக்கம் பிரதிபலிக்கும்.
உதாரணம்: வாடிக்கையாளர் வங்கியில் வைத்திருக்கும் சகல சேமிப்புக் கணக்குகளினதும் மொத்தத்தை சேமிப்புக் கணக்கு பிரதிபலிக்கும்.

**■ கணக்கின் (கணக்குகளின்) சுருக்கம்**

வாடிக்கையாளர் வங்கியில் வைத்திருக்கும் சேமிப்புக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகள் அனைத்தினதும் மீதிகளை ''கணக்குச் சுருக்கம்'' எடுத்துக்காட்டும். சகல புள்ளிவிபரங்களும் உரிய கணக்கின் மாத இறுதி மீதியைப் பிரதிபலிக்கும்.

**■ கால / மீள்வரும் வைப்புச் சுருக்கம்**

வாடிக்கையாளர் வங்கியில் வைத்திருக்கும் சகல நிலையான வைப்புக்களினதும் மீதிகளை ''கால/ மீள்வரும் வைப்புச் சுருக்கம்'' எடுத்துக்காட்டும். இப் பிரிவில், சகல நிலையான வைப்புக்களும் முதிர்ச்சித் திகதிக்கேற்ப வரிசைப்படுத்தப்படும். ஆகவே, எந்த வைப்பு முதலில் முதிர்ச்சியடையும் என்பது எடுத்துக்காட்டப்படும். சகல புள்ளிவிபரங்களும் உரிய கணக்கின் மாத இறுதி மீதியைப் பிரதிபலிக்கும்.

**■ கடனின் (கடன்களின்) சுருக்கம்**

வாடிக்கையாளர் வங்கியிலிருந்து பெற்ற சகல கடன்களினதும் நிலுவையை "கடனின் (கடன்களின்) சுருக்கம்'' எடுத்துக்காட்டும். சகல புள்ளிவிபரங்களும் உரிய கடனின் மாத இறுதி நிலுவையைப் பிரதிபலிக்கும்.

ஒரு கடன் இலத்திரனியல் விபரக்கூற்று உருவாக்கப்பட்ட ஒரு மாத காலத்தினுள் முன்கூட்டியே தீர்ப்பனவு செய்யப்பட்டால், கடனானது தொடர்ந்தும். செயலில் உள்ளதாகக் காட்டப்படும். எனினும், மீதித் தொகையானது ரூ.0/- என்று இலத்திரனியல் விபரக்கூற்றில் காட்டப்படும்.

- **குத்தகையின் (குத்தகைகளின்) சுருக்கம்**

வாடிக்கையாளர் வங்கியிலிருந்து பெற்ற சகல குத்தகைகளினதும் நிலுவையை "குத்தகையின் (குத்தகைகளின்) சுருக்கம்" எடுத்துக்காட்டும். சகல புள்ளிவிபரங்களும் உரிய குத்தகையின் மாத இறுதி நிலுவையைப் பிரதிபலிக்கும்.

DFCC BANK
Keep Growing

**Your Combined Banking Statement**

www.dfcc.lk
Contact Centre: 011 2350000

Customer ID #: **XXXXXX**
XXX XXXXXX XXXXXXXXXXX
NO. XXX, XXXXX XXXXX. XXXXXXX

Statement Period: 01/02/2017 - 28/02/2017
Statement Date: 01/03/2017

**Your Relationship Summary**

| Balance Summary | Currency | Balance |
|---|---|---|
| TERM DEPOSIT ACCOUNT | LKR | 3,492,189.06 |
| CURRENT ACCOUNT | LKR | 114,508.80 |
| SAVINGS ACCOUNT | LKR | 74,036.53 |

| Balance Summary | Currency | Balance |
|---|---|---|
| LEASE OUTSTANDING | LKR | 5,538,362.00 |
| LOAN OUTSTANDING | LKR | 0.00 |

**Account(s) Summary**

| Account Number | Account Type | Currency | Balance | Status |
|---|---|---|---|---|
| 005 XXXX XXXXX | CURRENT - ORDINARY | LKR | 114,508.80 | Active |
| 005 XXXX XXXXX | SAVINGS - MEGA BONUS | LKR | 320.82 | Active |
| 005 XXXX XXXXX | SAVINGS - SUPREME VAASI | LKR | 42,897.57 | Active |
| 005 XXXX XXXXX | SAVINGS - SUPREME VAASI | LKR | 20,769.94 | Active |
| 064 XXXX XXXXX | VARDHANA XTREME SAVER | LKR | 10,048.20 | Active |

**Term / Recurring Deposit Summary**

| Account Number | Maturity Date | Currency | Deposit Amount | Tenure |
|---|---|---|---|---|
| 005 XXXX XXXXX | 28/04/2017 | LKR | 1,073,325.54 | 1 Year(s) |
| 005 XXXX XXXXX | 25/07/2017 | LKR | 877,461.62 | 1 Year(s) |
| 005 XXXX XXXXX | 12/10/2017 | LKR | 1,391,401.90 | 1 Year(s) |
| 064 XXXX XXXXX | 02/01/2018 | LKR | 150,000.00 | 1 Year(s) |

**Loan(s) Summary**

| Facility Number | Loan Description | Currency | Outstanding Balance |
|---|---|---|---|
| XXXX XXX XXXXX | RETAIL LOANS | LKR | 0.00 |

**Leases (s) Summary**

| Facility Number | Facility Type | Currency | Outstanding Balance |
|---|---|---|---|
| XXXX XXX XXXXX | Finance Lease 2 | LKR | 5,538,362.00 |

**1.6 இலத்திரனியல் விபரக்கூற்று வசதியிலிருந்து விலகுதல்**

வாடிக்கையாளர் ஒருவர் இலத்திரனியல் விபரக்கூற்று வசதியிலிருந்து விலக விரும்பினால், அவர் அதற்கான வேண்டுகோளை அண்மையிலுள்ள DFCC வங்கிக் கிளையில் கையளிக்க வேண்டும்

**2. எம்முடன் தொடர்புகொள்ளும் முறை**

+94(11)2350000 என்ற எமது 24 மணிநேர தொடர்பு நிலைய தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது info@dfccbank.com என்ற மின்னஞ்சல் மூலம் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். எமது கிளை ஒன்றிற்கும் நீங்கள் விஜயம் செய்யலாம். கிளைகளின் விபரங்களை எமது வலைத்தளத்தில் பாருங்கள்.